CNR NO: TNTH13-000631-2022

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.

முன்னிலை : திரு.M.நல்லகண்ணன், B.Com., B.L.,
நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.

2026-ஆம் ஆண்டு மே திங்கள் 08-ஆம் நாள் வெள்ளிக்கிழமை

சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்: 13/2022

வெங்கடாசலம் ..... புகார்தாரர்

/ எதிர் /

1).SDP Traders,
(அதன் உரிமையாளர் சுரேஷ் மூலமாக).

2).சுரேஷ் (35/2026). ..... எதிரிகள்

<u>வழக்கின் சுருக்கம்</u>

<table>
<tr><th>வ.எண்</th><th colspan="2">விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td colspan="2">இருதரப்பினர்களின் பெயர்கள்</td></tr>
<tr><td>புகார்தாரர்:

வெங்கடாசலம் (42/2026),
த/பெ.முருகேசன்,
கதவு எண்.17,
குலாளர்பாளையம்,
போடிநாயக்கனூர் டவுன்,
தேனி மாவட்டம்.</td><td>எதிரிகள்:

1).SDP Traders,
நம்பர் - 12, அகரம் தெரு,
மார்க்கையன்கோட்டை,
உத்தமபாளையம் தாலுகா,
தேனி மாவட்டம்.

2).சுரேஷ் (35/2026),
த/பெ.மோகன்ராஜ்,
SDP Traders அதன் உரிமையாளர்,
நம்பர் - 12, அகரம் தெரு,
மார்க்கையன்கோட்டை,
உத்தமபாளையம் தாலுகா,
தேனி மாவட்டம்.</td></tr>
</table>

2.	எதிரிகளின் வயது	1).-, 2).35/2026.		
3.	தந்தை/கணவர் பெயர்	1).-, 2).த/பெ.மோகன்ராஜ்.		
4.	மதம்	1).-, 2).இந்து.		
5.	தொழில்	1).-, 2).SDP Traders-ன் உரிமையாளர்.		
6.	முகவரி	1 மற்றும் 2 எதிரிகள் – நம்பர் - 12, அகரம் தெரு, மார்க்கையன்கோட்டை.		
7.	தாலுகா, மாவட்டம்	உத்தமபாளையம், தேனி மாவட்டம்.		
8.	சம்பவம் நிகழ்ந்த நாள்	பொருந்தாது.		
9.	கைது	--		
10.	பிணையில் விடுவித்தல்	--		
11.	எதிரிகள் சிறையில் இருந்த நாட்கள்	--		
12.	புகார் தாக்கல் செய்யப்பட்ட நாள்	23.02.2022.		
13.	கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி	25.02.2022.		
14.	அழைப்பாணையுடன் நகல் வழங்கப்பட்ட தேதி	19.04.2022.		
15.	கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்	24.08.2022.		
16.	விசாரணை துவக்கம்	27.09.2022.		
17.	சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள்	Witness	Chief	Cross
		PW1	19.10.2022	30.08.2023
		PW2	07.02.2024	16.04.2024
		PW3	11.12.2024	22.04.2025

<table>
<tr><td>18.</td><td>விசாரணை முடிவு</td><td colspan="4">27.03.2026.</td></tr>
<tr><td>19.</td><td>கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="4">13.03.2026.</td></tr>
<tr><td rowspan="2">20.</td><td rowspan="2">பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள்</td><td>Date</td><td>U/s</td><td>Cr.M.P. No.</td><td>Result</td></tr>
<tr><td>19.07.2023</td><td>311 of Cr.P.C</td><td>1379/2023</td><td>Allowed</td></tr>
<tr><td>21.</td><td>தீர்ப்பு விவரம்</td><td colspan="4">விடுதலை.</td></tr>
<tr><td>22.</td><td>தீர்ப்புரை நகலை வழங்குதல்</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>23.</td><td>தலைமறைவாக இருந்த எதிரிகளின் விவரங்கள்</td><td colspan="4">16.05.2025 முதல் 13.03.2026 வரை - 2-வது எதிரி மீது பிடியாணை நிலுவையில் இருந்தது.</td></tr>
<tr><td>24.</td><td>மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>25.</td><td>பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>26.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td colspan="4">புகார்தாரர் தரப்பு சாட்சிகளை எதிரிகள் தரப்பில் காலதாமதமாக குறுக்கு விசாரணை செய்ததும் மற்றும் 16.05.2025 முதல் 13.03.2026 வரை - 2-வது எதிரி மீது பிடியாணை நிலுவையில் இருந்ததும்.</td></tr>
</table>

*****

இவ்வழக்கு 25.02.2022 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 10.04.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.P.ஜெயராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திருமதி.A.லலிதா அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

தீர்ப்புரை

1). இவ்வழக்கானது புகார்தாரர் சார்பில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் 1988–ன் பிரிவு 138 மற்றும் 142 மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 66-ன் கீழ் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 200–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2). **மனுவின் சுருக்கம்**:

2.1). புகார்தாரரிடம், 2-ஆம் எதிரி கடந்த 28.11.2021 அன்று ரூ.10,00,000/-த்தை ரொக்கமாக கைமாற்றுக் கடனாகப் பெற்றுக்கொண்டதாகவும், மேற்படி கடனிற்கு ஆதரவாக 1-ஆம் எதிரியின் SDP Traders நிறுவனத்தின் உரிமையாளர் என்ற முறையில், நிறுவனத்தின் பெயரில் கணக்கு வைத்துள்ள போடிநாயக்கனூர் கிளையின், IDBI வங்கியின் 083477 என்ற எண் கொண்ட காசோலை ஒன்றை 01.02.2022 என்று தேதியிட்டு, ரூ.10,00,000/-த்திற்கு புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், பின்னர் 2-ஆம் எதிரி உறுதியளித்ததன்பேரில், மேற்படி காசோலையைப் பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் கணக்கு வைத்திருக்கும் கனரா வங்கி, போடிநாயக்கனூர் கிளையில் 03.02.2022 அன்று வசூலுக்குச் செலுத்தியபோது, 1-ஆம் எதிரி வங்கி கணக்கில் “Funds Insufficient” என்ற காரணத்தினால் காசோலையானது 04.02.2022 அன்று திருப்பப்பட்டுவிட்டதாகவும், மேற்படி காசோலைக்குரிய தொகையைக் கேட்டு 10.02.2022 அன்று ம.சா.1 புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரிகள் பெற்றுக்கொண்டு, பொய்யான சங்கதிகளைக் குறிப்பிட்டு 15.02.2022-ஆம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும், ஆனால், இதுவரை எதிரிகள் காசோலைக்குரிய தொகையைத் திருப்பிச் செலுத்தாமல் புகார்தாரரை ஏமாற்றி மோசடி செய்துள்ளதாகவும்,

2.2). எனவே, எதிரிகளின் செய்கையானது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றமாகும் என்றும், எனவே, புகார்தாரருக்கு ஏற்பட்ட இழப்புக்கு எதிரிகளுக்கு தண்டனை வழங்கி உரிய இழப்பீட்டை எதிரிகளிடமிருந்து பெற்றுத்தர வேண்டி புகார்தாரர் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

3). எதிரிகளுக்கு அழைப்பாணையுடன் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு, அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, 2-ஆம் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது, எதிரிகள் மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்தின் சாரம்சம் குறித்து 24.08.2022-ஆம் தேதி விளக்கி கூறி வினவியபோது, எதிரிகள் பொய் வழக்கு என்று கூறினர். எனவே, புகார்தாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4). <u>**புகார்தாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>:–

புகார்தாரர் தரப்பு சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, புகார்தாரர் வெங்கடாசலம் என்பவர் ம.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, ம.சா.1–ன் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன. மேலும், புகார்தாரர் தரப்பில், செல்லப்பாண்டி என்பவர் ம.சா.2 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, ம.சா.2–ன் மூலமாக ம.சா.ஆ.7 சான்றாவணம் குறியிடப்பட்டுள்ளன. மேலும், புகார்தாரர் தரப்பில், மணிமாறன் என்பவர் ம.சா.3 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, ம.சா.3–ன் மூலமாக சா.சா.ஆ.1 சான்றாவணம் குறியிடப்பட்டுள்ளன.

5). புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிகளுக்குப் பாதகமாக உள்ள அம்சங்களைத் தொகுத்து 13.03.2026-ஆம் தேதி கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது, புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் சாட்சி என்றும், வழக்கு காசோலை

தன்னுடையதுதான் என்றும், மற்றும் காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு என்றும் கூறினர். எனவே, எதிரிகள் தரப்பு சாட்சிய விசாரணைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு, எதிரிகள் தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. போதிய வாய்ப்பளித்தும் எதிரிகள் தரப்பில் எந்த ஒரு சாட்சியத்தையும் முன்னிலைப்படுத்தவில்லை.

6). **எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**:-

எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிடப்படவில்லை.

7). இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8). **தீர்வுக்குரிய பிரச்சனை**:

8.1). இவ்வழக்கில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டானது புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

8.2). மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

9). **தீர்வும் அதன் காரணமும்**

9.1). வழக்கு காசோலை எதிரிகளின் வங்கிக் கணக்கிற்குரிய காசோலைதான்

என்பது எதிரிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை. மேலும், ம.சா.ஆ.1 வழக்கு காசோலையானது 01.02.2022-ஆம் தேதியிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி காசோலையை தேதி புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள போடிநாயக்கனூர் கிளை, கனரா வங்கியில் வசூலுக்குச் செலுத்தியுள்ளார் என்பதும், மேற்படி காசோலையானது 04.02.2022-ஆம் தேதி போடிநாயக்கனூர் கிளை, IDBI வங்கியின் மூலம் Funds Insufficient என்ற குறிப்புடன் திரும்பியுள்ளது என்பதை ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 வரையிலான ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

9.2). காசோலை திருப்பப்பட்டவுடன் எதிரிகளுக்கு வழக்கறிஞரின் அறிவிப்பு சட்ட முறையான காலத்தில் சார்பு செய்யப்பட்டுள்ளதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில், ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பானது 10.02.2022-ஆம் தேதி புகார்தாரரால் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், அதனை எதிரிகள் பெற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதையும் ம.சா.ஆ.3 முதல் ம.சா.ஆ.5 ஆவணங்கள் வாயிலாக அறிய முடிகிறது. எனவே, புகார்தாரர் சட்டமுறையான காலத்தில் சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதும், அதனை எதிரிகள் பெற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதும் மேற்படி சான்றாவணங்களின் வாயிலாகப் புகார்தாரர் தரப்பு நிரூபித்துள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.3). மேலும், வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், வழக்கானது 23.02.2022-ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் 25.02.2022-ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. வழக்கு காசோலையானது எதிரிகள், புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய சட்டப்படியான கடனிலிருந்து விடுபடக் கொடுக்கப்பட்டதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில், எதிரிகள் காசோலையை மறுக்கவில்லை, ஆனால் அதிலுள்ள கையொப்பத்தை மறுத்துள்ளார்கள். மேலும், எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் வினவியபோது, பொய் வழக்கு என்று மட்டுமே கூறியுள்ளார்கள். மேலும், எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது, எதிரிகள் பொய்

சாட்சி என்றும், வழக்கு காசோலை தன்னுடையதுதான் என்றும், மற்றும் காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும் மறுத்துள்ளார்கள். இருப்பினும், காசோலையிலுள்ள கையொப்பம் எதிரி தன்னுடையதல்ல என்று நிரூபிக்க எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பதிலிருந்து, காசோலையிலுள்ள கையொப்பம் எதிரியினுடையது என்பதால்தான் எதிரி அதனை மறுக்க எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை எனக் குறிப்பிடும் புகார்தாரர் தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881 பிரிவு 139-ன் கீழான சட்ட அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக எழுவதாகவே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.4). மேற்படி சட்ட முறையான அனுமானம் எதிரிகள் தரப்பால் மறுத்துரைக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்து பரிசீலனை செய்கையில், புகார்தாரர் வெங்கடாசலம் தனது குறுக்கு விசாரணையில், "**என்னிடம் 21.11.2021-ஆம் தேதி சுரேஷ் என்பவர் ரூ.10,00,000/-ம் வாங்கினார் என்றால், சரிதான். சுரேஷ் 28.11.2022-ஆம் தேதி இன்னொரு 10 லட்சம் ரூபாய் வாங்கினார் என்று நான் கூறியுள்ளேன் என்றால், சரிதான்**" என சாட்சியம் அளித்துள்ளார். ஒரு வார இடைவெளியில் ரூ.20,00,000/-ம் லட்சம் கடனை எதிரி சுரேஷ் பெற்றதாக இந்த புகார்தாரர் வெங்கடாசலம் தனது குறுக்கு விசாரணையில் குறிப்பிட்டுள்ளார்.

9.5). மேலும், இது குறித்து எதிரி தரப்பில் புகார்தாரர் வெங்கடாசலத்தை குறுக்கு விசாரணை செய்கையில், அவர் தனது சாட்சியத்தில், "**ஒரே மாதத்தில் 20 லட்சம் பணம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்று சொன்னால் சரியல்ல, வசதியுள்ளது. மேற்படி ரூபாய் 20 லட்சம் ரூபாயை நான் எனது அக்கவுண்டில் வைத்துதான் எடுத்துக் கொடுத்தேன் என்றால், அக்கவுண்டிலும் இருந்தது, கையிலும் இருந்தது. எவ்வளவு அக்கவுண்டில் இருந்தது, எவ்வளவு கையில் இருந்தது என்றால், அக்கவுண்டில் ரூபாய் 11 லட்சம், மீதி பணம் கையிலும் இருந்தது. எந்த தேதியில் ரூபாய்**

11 லட்சம் பணத்தை வங்கி கணக்கில் எடுத்தேன் என்பதற்கான வங்கி பரிவர்த்தனைகள் அடங்கிய கணக்கு பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.6). அதாவது, ஒரு வார இடைவெளியில் ரூ.20,00,000/-ம் பணம் கொடுத்ததாகவும், அதில் ரூ.11,00,000/-ம் பணத்தை வங்கியில் இருந்து எடுத்துக் கொடுத்ததாகவும், மீதி பணத்தை, அதாவது, ரூ.9,00,000/-ம் பணத்தை கையில் வைத்திருந்ததாகவும், அதனையும் கொடுத்ததாகவும் குறிப்பிட்டு புகார்தாரர் வெங்கடாசலம் தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.

9.7). இருப்பினும், 11 லட்சம் பணத்தை எந்த தேதியில் வங்கியில் இருந்து எடுத்தார் என்பதற்கு ஆதரவாக ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான் என புகார்தாரர் வெங்கடாசலம் தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். வங்கி பரிவர்த்தனைகள் நடைபெற்றதற்கு ஆதரவாக அந்த வங்கி கணக்கின் அறிக்கையினை தாக்கல் செய்திருந்தாலே அந்த விபரம் எளிதில் நிரூபிக்கப்பட்டு இருக்கும். ஆனால், புகார்தாரர் அதனை தாக்கல் செய்ய எவ்வித முயற்சியும் செய்யவில்லை என்பதிலிருந்து, புகார்தாரரின் வங்கிக் கணக்கில் ரூ.11,00,000/-ம் பணம் இருந்தது என்பதை நிரூபிக்காத புகார்தாரர், அதனை எடுத்து எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் விவரம் ஏற்புடையது அல்ல எனக் குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.8). மேலும், கையில் வைத்திருந்த ரூ.9,00,000/-ம் பணம் தனக்கு எப்படி வந்தது என்பதற்கு ஆதரவாக புகார்தாரர் தரப்பில் கூடுதலாக இரண்டு சாட்சிகள் முன்னிடப்பட்டுள்ளது. அது குறித்து பரிசீலனை செய்கையில், ம.சா.2 செல்லப்பாண்டி என்பவர் தனது நிரூபண வாக்குமூலத்தில், "**புகார்தாரர் தனது தோட்டத்தினை விற்பனை செய்து கைவசம் வைத்திருந்த தொகையை எதிரிக்கு கொடுத்ததாக**"

குறிப்பிட்டுள்ளார்.

9.9). மேலும், இது குறித்து ம.சா.2 செல்லப்பாண்டி தனது குறுக்கு விசாரணையில், **"எந்த வருடம், எந்த தேதியில் விற்றார் என்றால், பணம் கொடுத்ததாக சொல்லும் தேதிக்கு ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு முன்பு வீட்டை விற்ற பணத்தை கையில் வைத்திருந்தார். தோட்டம் எதுவும் விற்கவில்லை. நான் எனது முதல் விசாரணையில் தோட்டம் விற்று பணம் வைத்திருந்தார் என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால், சரிதான்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.10). ம.சா.2 செல்லப்பாண்டி தனது நிரூபண வாக்குமூலத்தில், புகார்தாரர் தனது தோட்டத்தை விற்று பணம் வைத்திருந்ததாகவும், அதனை எதிரிக்கு கொடுத்ததாகவும், அதனை தான் பார்த்ததாகவும் சொல்லிவிட்டு, ம.சா.2 செல்லப்பாண்டி தனது குறுக்கு விசாரணையில், புகார்தாரர் தனது தோட்டத்தை விற்பனை செய்யவில்லை எனவும், அவரது வீட்டை விற்பனை செய்ததாகவும், தான் நிரூபண வாக்குமூலத்தில், புகார்தாரர் தோட்டத்தை விற்பனை செய்து பணம் வைத்திருந்ததாக சொல்லியிருந்தால் அது தவறு எனவும் தனது நிரூபண வாக்குமூலத்திற்கு விரோதமாகவே சாட்சியம் அளித்துள்ளார்.

9.11). மேலும், இந்த வழக்கின் புகார்தாரர் வெங்கடாசலம், தான் கையில் வைத்திருந்த ரூ.9,00,000/-ம் பணத்தை எதிரிக்கு கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளாரே தவிர, அந்த ரூ.9,00,000/-ம் பணம் தனக்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பது குறித்து அவரே தனது சாட்சியத்தில் எவ்வித குறிப்பும் கொடுக்காத நிலையில், அதனை பூர்த்தி செய்யும் விதமாக அந்த ரூ.9,00,000/-ம் பணம் புகார்தாரருக்கு எவ்வாறு கிடைத்ததற்கு என்பதற்கு ஆதரவாக புகார்தாரர் தரப்பில் சாட்சியம் முன்னிடப்பட வேண்டுமே என்பதற்காக இந்த ம.சா.2 செல்லப்பாண்டி என்பவர் சாட்சியாக புகார்தாரர் தரப்பில் முன்னிடப்பட்டுள்ளார் எனக் குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையது என்று

இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.12). ஏனெனில், இந்த ம.சா.2 செல்லப்பாண்டி தனது நிரூபண வாக்குமூலத்தில், புகார்தாரர் வெங்கடாசலம் அவரது தோட்டத்தை விற்று பணம் வைத்திருந்ததாக சொல்லிவிட்டு, தனது குறுக்கு விசாரணையில், புகார்தாரர் வெங்கடாசலம் தோட்டத்தை விற்பனை செய்யவில்லை எனவும், வீட்டைத்தான் விற்பனை செய்ததாகவும் தனது முதல் விசாரணைக்கு விரோதமாகவே சாட்சியம் அளித்துள்ளதால், அவரது சாட்சியம் முன்னுக்குப்பின் முரணாக உள்ளது என குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.13). மேலும், ம.சா.3 மணிமாறன் தனது நிரூபண வாக்குமூலத்தில், "**எதிரி, புகார்தாரருக்கு 01.02.2022-ஆம் தேதியிட்டு ரூ.10,00,000/-த்திற்கு போடிநாயக்கனூர் ஐடிபிஐ வங்கி கிளையில் மாற்றக்கூடிய 083477 என்ற எண் கொண்ட காசோலையை புகார்தாரரிடம் கொடுத்தார்**" என குறிப்பிட்டு சொல்லிவிட்டு, ம.சா.3 மணிமாறன் தனது குறுக்கு விசாரணையில், "**எதிரி எந்த வங்கியின் காசோலையை கொடுத்தார் என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால், சரிதான். எதிரி காசோலையில் எந்த தேதியிட்டுக் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.14). எனவே, ம.சா.3 மணிமாறன் தனது நிரூபண வாக்குமூலத்தில், எதிரி எந்த தேதியில், எந்த வங்கி காசோலையை, என்ன தேதியிட்டு கொடுத்தார் என குறிப்பிட்டு சொல்லிவிட்டு, ம.சா.3 மணிமாறன் தனது குறுக்கு விசாரணையில், மேற்படி விபரங்கள் எதுவும் தனக்கு தெரியாது என தனது முதல் விசாரணைக்கு மாறாக சாட்சியம் அளித்துள்ளார் என குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.15). எனவே, புகார்தாரர் இந்த வழக்கின் எதிரிக்கு ரூ.20,00,000/-ம் கடன் எவ்வாறு கொடுத்தார் என்பதை நிரூபிக்காத நிலையில், எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு புகார்தாரருக்கு வசதி உள்ளது என்பதை நிரூபிக்காத நிலையில், எதிரிக்கு ரூ.20,00,000/-ம் கடனாக கொடுத்ததாகச் சொல்லும் விபரம் புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.16). மேலும், எதிரி தரப்பில் ம.சா.1 வெங்கடாசலம் தனது குறுக்கு விசாரணையில், "**05.02.2022-ஆம் தேதியில் எனது வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டதாக ம.சா.ஆ.5 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். 17.02.2022-ஆம் தேதி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். இரண்டாவது காசோலை குறித்து வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி 11.02.2022-ஆம் தேதி பெற்றுக் கொண்டார் என்றால், சரிதான். அதற்கு நான் 23.02.2022-ல் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். மேற்படி இரண்டு காசோலைகளுக்கான வழக்குகளிலும் எதிரி அறிவிப்பை பெற்றுக்கொண்ட 15 நாட்கள் கழித்து தாக்கல் செய்யாமல், 13 நாளில் தாக்கல் செய்துள்ளேன் என்றால், அது பற்றிய விபரங்கள் எனது வழக்கறிஞருக்குதான் தெரியும்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.17). சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.13/2022 வழக்கானது 23.02.2022-ஆம் தேதிதான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதாவது, புகார்தாரர் தரப்பில் 10.02.2022-ஆம் தேதி எதிரிக்கு 15 நாள் அவகாசம் வழங்கி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும், அதனை 18.02.2022-ஆம் தேதி எதிரி பெற்றுக் கொண்டதாகவும், அதற்கு ஆதரவாக ம.சா.ஆ.5 ஆன்லைன் டிராக் கன்சைன்மென்ட் இணையதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9.18). அதாவது, எதிரி 18.02.2022-ஆம் தேதிதான் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டுள்ளார் எனவும், அவருக்கு 15 நாள் அவகாசம் வழங்காமல் 23.02.2022-

ஆம் தேதியிலேயே இந்த புகார்தாரர் வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டார் எனவும், எனவே, மாற்றுமுறை ஆவணச் சட்டம் 1881 **பிரிவு** 138(c)**-ன் படி எதிரிக்கு** 15 **நாள் அவகாசம் வழங்கி, அந்த** 15 **நாள் அவகாசம் முடிவுற்ற பிறகுதான் புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் எனவும், அவ்வாறு சட்டப்படியான கால அவகாசம் வழங்காமல் புகார்தாரர் தரப்பில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், எனவே, அது சட்ட குறைபாடுடையது எனவும் குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் குறித்து பரிசீலனை செய்கையில்,**

9.19). **எதிரி தரப்பில்** 3 **முன் தீர்ப்புகள் 1).The Hon'ble High Court of Judicature at Madras, Dated.22.07.2025, Arumugam Vs T.Sukumaran in Crl.A.No.548/2014, 2).The Hon'ble Supreme Court of India, Dated.19.09.2014, Yogendra Pratap Singh Vs Savitri Pandey & Anr, 3).The Hon'ble High Court of Karnataka Dharwad Bench, Dated.16.02.2021, Jitendra Shigihalli Vs Manoj தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், எதிரிக்கு பணத்தை திருப்பி செலுத்துவதற்காக வழங்கப்பட்ட** 15 **நாட்கள் கால அவகாசம் முடிவதற்கு முன்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு** (prematured case) **சட்டப்படி ஏற்புடையது அல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது.**

9.20). **ஆனால், இது குறித்து புகார்தாரர் தரப்பில் மாண்புமிகு அலகாபாத் உயர்நீதிமன்றம் Ravi dixit vs State of U.P and another in case No. 14068 of 2020 dated 23.09.2020 என்ற வழக்கில், பத்தி - 12-ல்,**

12. In the case in hand, the petitioner herein replied to the notice Which goes to show that the intention of the drawer is clear that he did Not wish to make the payment. Once this is clarified, should the Complainant wait for the minimum period of 15 days, the answer Would be 'no' **என குறிப்பிட்டுள்ளது. எனவே, எதிரி தரப்பு வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் பணத்தை திரும்பச் செலுத்த முடியாது எனக் கூறிய பிறகு** 15 **நாட்கள் கழித்துதான் புகார்தாரர் இந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பது இல்லை. எனவே, எதிரி பணத்தை**

திருப்பி செலுத்த முடியாது என சொன்ன பிறகு, உடனேகூட புகார்தாரர் வழக்கை தாக்கல் செய்யலாம் என மேற்படி முன் தீர்ப்பின்படி கருதப்பட வேண்டும் என புகார்தாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

9.21). **ஆனால், இது குறித்து எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Yogendra Pratap Singh vs Savitri Pandey and another in criminal appeal number 605 of 2012 dated 19th September 2014 reported in a i r 2015 supreme court 157 என்ற வழக்கில், பத்தி - 39-இல்,**

39. Rather, the view taken by this Court in Sarav Investment & Financial Consultancy2 wherein this Court held that service of notice in terms of Section 138 proviso (b) of the NI Act was a part of the Cause of action for lodging the complaint and communication to the accused about the fact of Dishonouring of the cheque and calling upon to pay the amount within 15 days was imperative in Character, commends itself to us. As noticed by us earlier, no complaint can be maintained against The drawer of the cheque before the expiry of 15 days from the date of receipt of notice because the Drawer/accused cannot be said to have committed any offence until then. We approve the decision Of this Court in Sarav Investment & Financial Consultancy and also the judgments of the High Courts which have taken the view following this judgment that the complaint under Section 138 of The NI Act filed before the expiry of 15 days of service of notice could not be treated as a complaint in The eye of law and criminal proceedings initiated on such complaint are liable to be quashed **என குறிப்பிட்டுள்ளது. எனவே, எதிரிக்கு வழங்க வேண்டிய** 15 **நாள் கால அவகாசம் முடிந்த பிறகு புகார் தாக்கல் செய்யப்பட வேண்டும் எனவும், அதற்கு முன்பாக தாக்கல் செய்யப்பட்ட புகார் முன்கூட்டியே தாக்கல் செய்யப்பட்ட புகார்** (prematured complaint) **எனக்கூட கருத இயலாது என்றும், மேற்படி** 15 **நாட்கள் கால அவகாசம் முடிவதற்கு முன்பாக தாக்கல் செய்யப்படும் எதையும் புகார் என்றே கருத இயலாது என குறிப்பிடப்பட்டுள்ளது.**

9.22). **எனவே,** 15 **நாட்கள் எதிரிக்கு கால அவகாசம் வழங்கிய பிறகே புகாரானது**

தாக்கல் செய்யப்பட வேண்டும் எனவும், அவ்வாறு தாக்கல் செய்யப்படவில்லை என்றால், அதனை புகார் என்றே கருதக்கூடாது என்றும் (பத்தி 36-ன் படி) மேற்படி உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேற்சொன்ன உயர்நீதிமன்ற தீர்ப்பை விட உச்ச நீதிமன்ற தீர்ப்பு இந்திய அரசியலமைப்பு சட்டம் ஷரத்து 141-ன் படி விசாரணை நீதிமன்றம் பின்பற்ற வேண்டிய சட்டமாகும் என்பதால் இந்நீதிமன்றம் உச்ச நீதிமன்ற தீர்ப்பை பின்பற்றுகிறது.

9.23). எனவே, இந்த வழக்கில் புகாரானது 15 நாள் கால அவகாசம் வழங்கி தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், புகார்தாரர், தான் கொடுத்ததாக சொல்லும் கடனை நிரூபிக்கவில்லை என்பதாலும், எதிரிக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு புகார்தாரருக்கு வசதி உள்ளது என்பதை புகார்தாரர் நிரூபிக்கவில்லை என்பதாலும், புகார்தாரருக்கு ஆதரவான சட்ட அனுமானம் எதிரி தரப்பில் மறுத்துரைக்கப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, சட்ட முறையாக வலியுறுத்தி பெறக்கூடிய கடன் தொகை இல்லை என்பதை எதிரி தரப்பு மறுத்துரைத்துள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.24). எனவே, சட்டப்படி வலியுறுத்தி திரும்ப பெறக்கூடிய கடன் தொகை எதுவும் எதிரிகள், புகார்தாரருக்கு செலுத்த வேண்டும் என்ற விபரம் புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, புகார்தாரருக்கு சட்டப்படி வலியுறுத்தி பெறக்கூடிய கடன் தொகை எதுவும் இல்லை என்பதை எதிரிகள் தரப்பு உரிய சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக நிரூபித்துள்ளது என்பதால் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139-ன் கீழான புகார்தாரருக்கு ஆதரவான அனுமானம் எதிரிகள் தரப்பில் மறுத்துரைக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, எதிரிகள் மீதான மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான புகார், புகார்தாரர் தரப்பில் உரிய சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக நிரூபிக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.25). **மேலும், புகார்தாரர் தரப்பில் மேற்படி உச்ச நீதிமன்ற முன் தீர்ப்பிலேயே பத்தி** 42-**ல்,**

42…Now, since Our answer to question (i) is in the negative, we observe that the payee or the holder in due course of The cheque may file a fresh complaint within one month from the date of decision in the criminal Case and, in that event, delay in filing the complaint will be treated as having been condoned under The proviso to clause (b) of Section 142 of the NI Act. This direction shall be deemed to be applicable To all such pending cases where the complaint does not proceed further in view of our answer to Question (i). As we have already held that a complaint filed before the expiry of 15 days from the date Of receipt of notice issued under clause © of the proviso to Section 138 is not maintainable, the Complainant cannot be permitted to present the very same complaint at any later stage. His remedy Is only to file a fresh complaint; and if the same could not be filed within the time prescribed under Section 142(b), his recourse is to seek the benefit of the proviso, satisfying the Court of sufficient Cause. Question (ii) is answered accordingly. **எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, வழக்கானது தவறுதலாக முன்கூட்டியே தாக்கல் செய்யப்பட்டிருந்தால், மீண்டும் புதிதாக வழக்கு தாக்கல் செய்யப்பட வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், எனவே, புகார்தாரர் மீண்டும் வழக்கு தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டும் என கோரியுள்ளார். அது குறித்து பரிசீலனை செய்கையில்,**

9.26). **இந்த வழக்கில்,** 15 **நாட்கள் எதிரிக்கு சட்டபூர்வமான கால அவகாசம் வழங்காமல் புகாரானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் மட்டுமே வழக்கு தள்ளுபடி செய்யப்படவில்லை. மேலும், புகார்தாரர், எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு தனக்கு வசதி உள்ளது என்பதை நிரூபிக்கவில்லை என்பதாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதால், மேற்படி புகார்தாரர் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.**

9.27). புகார்தாரர் தரப்பில் முன்னிடப்பட்டுள்ள சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலித்த வகையில், எதிரிகள் மீது சாட்டப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. எனவே, எதிரிகளை இந்நீதிமன்றம் குற்றவாளிகள் இல்லை எனத் தீர்மானிக்கிறது.

10).**<u>தீர்வு</u>**:

10.1). முடிவாக, எதிரிகளை மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 255(1)-ன் கீழ் இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது. புகார்தாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

10.2). இவ்வழக்கில் தடயப் பொருள் தாக்கல் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் 2026 மே திங்கள் 08-ஆம் நாளாகிய இன்று அவையறியப் பகரப்பட்டது.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.05.08 18:16:03 +0530

நீதித்துறை நடுவர்
போடிநாயக்கனூர்.

<u>1). புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் பட்டியல்</u>:

1.	ம.சா.1	திரு.வெங்கடாசலம்	புகார்தாரர்
2.	ம.சா.2	திரு.செல்லப்பாண்டி	புகார்தாரரின் நண்பர்
3.	ம.சா.3	திரு.மணிமாறன்	புகார்தாரரின் நண்பர்

<u>2). புகார்தாரர் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்</u>:

1.	ம.சா.ஆ.1	01.02.2022 நாளிட்ட போடிநாயக்கனூர் ஐடிபிஐ வங்கி கிளையில் மாற்றக்கூடிய 083477 என்ற எண்ணுள்ள காசோலை அசல்.	ம.சா.1
2.	ம.சா.ஆ.2	மேற்படி எதிரியின் வங்கி கணக்கில் “Fund Insufficient” என்று 04.02.2022 அன்று திருப்பப்பட்டதற்கான மெமோரண்டம் அசல்.	ம.சா.1
3.	ம.சா.ஆ.3	மேற்படி எதிரிகளுக்கு மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மூலம் 10.02.2022 அன்று அனுப்பிய நோட்டீஸ் அலுவலக நகல்.	ம.சா.1
4.	ம.சா.ஆ.4	மேற்படி நோட்டீஸ் 10.02.2022 அனுப்பியதற்கான தபால் ரசீது அசல்.	ம.சா.1
5.	ம.சா.ஆ.5	மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான இணையதள ஒப்புகை சீட்டு கணிணி நகல்.	ம.சா.1
6.	ம.சா.ஆ.6	எதிரிகள் வழக்கறிஞர் மூலம் மனுதாரரின் வழக்கறிஞருக்கு 15.02.2022 அன்று அனுப்பிய பதில் அறிவிப்பு சார்வு நகல்.	ம.சா.1
7.	ம.சா.ஆ.7	2-வது சாட்சியின் ஆதார் நகல் (அசல் ஒப்பீட்டு நகல்).	ம.சா.2

<u>3). புகார்தாரர் தரப்பு சான்றுப் பொருள்களின் பட்டியல்</u>: தாக்கல் இல்லை.

<u>4). புகார்தாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்களின் பட்டியல்</u>:

1.	சா.சா.ஆ.1	ம.சா.3 சாட்சியின் ஆதார் அடையாள அட்டை (நகல்).	ம.சா.3

<u>5). எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம் மற்றும் சான்றுப் பொருட்களின் பட்டியல்</u>: தாக்கல் இல்லை.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.05.08 18:16:09 +0530

நீதித்துறை நடுவர்

போடிநாயக்கனூர்.